கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம், பெரியகுளம்

வழக்கு எண் MCOP No.196/2023

நாள் 29.11.2024

**மனுதாரர் தரப்பில் மசாஆ 1 ஆஜராகி, 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

ம.சா.1 – திருக்குமரன் முன்னிலையானார். சத்திய பிரம்மாணம் செய்யப்பட்டார்.

**2ம் எதிர்மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்த கார்த்திக் எனது உடன்பிறந்த தம்பி ஆகும். 2, 3 மனுதார்கள் இறந்த கார்த்திக்கிற்கு அக்கா ஆகும். கார்த்திக் திருமணம் செய்து கொள்ளவில்லை. விபத்திற்கு முன்னரே கார்த்திக்கின் பெற்றோர்கள் இறந்து விட்டார்கள். எனக்கும், 2, 3 மனுதாரர்களுக்கும் திருமணம் ஆகி நாங்கள் தனித்தனியாக குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். கார்த்திக் விபத்திற்கு முன்பாக தனியாகத்தான் வசித்து வந்தார் என்றால் இல்லை, என்னுடன் இருந்து வந்தார். கார்த்திக் என்னுடன்தான் இருந்து வந்தார் என்பதை காட்டுவதற்கு குடும்ப அட்டையோ அல்லது வேறு ஆவணங்களையோ தாக்கல் செய்யவில்லை என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்யலாம். நானும், 2, 3 மனுதாரர்களும் கார்த்திக்கின் முதல்நிலை வாரிசுகள் அல்ல என்றால் சரிதான். நானும், 2, 3 மனுதாரர்களும் கார்த்திக்கின் வாரிசுகள் என்று நீதிமன்றம் மூலம் உத்தரவு வாங்கியுள்ளோம், அதனடிப்படையில் வருவாய்த்துறையில் வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளோம். இறந்த கார்த்திக்கின் வருமானத்தை சார்ந்துதான் நாங்கள் வாழ்ந்து வருகிறோம் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. கார்த்திக் எவ்வளவு வருமானம் ஈட்டி வந்தார் என்று காட்டுவதற்கும், அவர் என்ன வேலை செய்து வந்தார் என்பதை காட்டுவதற்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் கார்த்திக் ஓட்டுநராக வேலை பார்த்து வந்தார் என்று காட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்துள்ளேன். ஓட்டுநராக வேலை பார்த்து வருவதற்கு ஓட்டுநர் உரிமம் மட்டுமே தகுந்த ஆவணம் என்று சொல்ல முடியாது என்று சொன்னால் சரியல்ல. எந்த நிறுவனத்தில் அல்லது யார் கீழ் ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறார் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. நான் தாக்கல் செய்த ஆவணங்களை படித்து பார்த்துள்ளேன். திருநெல்வேலி மாவட்டம், மானூர் காவல் நிலையத்தில் தாக்கல் செய்த மசாஆ1 முதல் தகவல் அறிக்கையில் 3ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN-60-AF-2106 என்ற சரக்கு வாகனத்தை எனது சகோதரர் கார்த்திக்தான் டிரைவராக இருந்து வண்டியை ஓட்டி சென்றார் என்று உள்ளது என்றால் சரிதான். மேலும் மசாஆ1ல் நின்று கொண்டிருந்த TN-90-D-5134 என்ற வாகனத்தின்மீது எனது தம்பி கார்த்திக் டிரைவாக இருந்து, அவர் ஓட்டி சென்ற வாகனத்தை மிகவும் வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று, நின்று கொண்டிருந்த TN-90-D-5134 என்ற வாகனத்தின் பின்பக்க இடதுபுறத்தில் மோதி விட்டார் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் முன்னால் சென்ற வாகனம் திடீரென்று பிரேக் அடித்ததால்தான் எனது தம்பி ஓட்டி சென்ற வாகனம் முன்னால் சென்ற வாகனத்தின்மீது மோதியது. விபத்து சம்பந்தமாக நான் TN-90-D-5134 என்ற வாகனத்தின் மீது புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் புகார் கொடுக்க சென்றபோது ஏற்கனவே TN-90-D-5134 என்ற வாகனத்தின் ஓட்டுநர் புகார் கொடுத்து விட்டார் என்றும், அதனால் எனது புகாரை அவர்கள் வாங்கவில்லை. TN-90-D-5134 என்ற வாகனத்தின் ஓட்டுநர் கொடுத்த புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் படித்து பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். TN-90-D-5134 என்ற வாகனத்தின் ஓட்டுநர் கொடுத்த புகாரிலும், முதல் தகவல் அறிக்கையிலும் உள்ள தகவல்களை மறுத்து காவல்துறை மேலதிகாரிகளுக்கோ, காவல்துறை கண்காணிப்பாளருக்கோ புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. இந்த விபத்து சம்பந்தமான திருநெல்வேலி மானூர் காவல் நிலைய குற்ற எண் 0232/2020 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை மசாஆ3 ஆக தாக்கல் செய்துள்ளேன். மசாஆ1 மற்றும் 2 ஆவணங்கள் காவல்துறையிலிருந்து பெற்ற சான்றிட்ட நகல்கள் ஆகும். மேற்படி குற்ற வழக்கு எனது தம்பி இறந்து விட்டதால் abate ஆகி விட்டது என்பதை நான் தெரிந்து கொண்டேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் தற்போதாவது குற்ற வழக்கை பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. 1ம் எதிர்மனுதாரர்தான் இந்த விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்

என்றால் சரிதான். திருநெல்வேலி மானூர் காவல் நிலையத்தில் குற்ற வழக்கு பற்றி முன்னேறதெரிந்து கொள்ள ஏதேனும் முயற்சி எடுத்தேனா என்றால் இல்லை. நான் இந்த வழக்கில் எனது தம்பி கார்த்திக் ஓட்டி வந்த TN-60-AF-2106 என்ற சரக்கு வாகனத்தின் உரிமையாளரை 3ம் எதிர்மனுதாரராகவும், அந்த வண்டியின் காப்பீட்டாளரை 4ம் எதிர்மனுதாரராகவும் காண்பித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த மனுவை நான் பிரிவு 163(A)ன்கீழ் தாக்கல் செய்துள்ளதால், எனது தம்பியின் அஜாக்கிரதையால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்பதை ஒத்துக் கொள்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் தனது சரக்கு வாகனமான TN-90-D-5134 என்ற வாகனத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்திற்கு 22.02.2020 முதல் 21.02.2021 வரை காப்பீடு வேண்டி, காப்பீட்டு கட்டணத்திற்கு ரூ.56,122/-க்கு 22.02.2020ம் தேதியிட்டு, திப்பம்பட்டி, சேலம் மாவட்டம் இந்தியன் வங்கியின் காசோலையை வழங்கினார் என்றும், காசோலை தொகை கலெக்சன் ஆனால் மட்டுமே காப்பீடானது ஊர்ஜித்திற்கு வரும் என்றாலும், 1ம் எதிர்மனுதாரர் வழங்கிய காசோலையை, 2ம் எதிர்மனுதாரர் சேலம் மாவட்டம், கள்ளக்குறிச்சி, தமிழ்நாடு மெர்க்கண்டைல் பேங்கில் கலெக்சனுக்கு போட்டதில், மேற்படி காசோலை 27.02.2020ம் காசோலைக்குரிய பணம் இல்லை என்று திரும்பி விட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, அதனால் 2ம் எதிர்மனுதாரர் காசோலைக்காக வழங்கப்பட்ட காப்பீடு பாலிசியை ரத்து செய்து விட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2ம் எதிர்மனுதாரர் பாலிசியை ரத்து செய்த விவரங்களை கூறி 1ம் எதிர்மனுதாருக்கும், சம்பந்தப்பட்ட மோட்டார் வாகன அலுவலகத்திற்கும் அனுப்பி விட்டார் என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது. 10.05.2020ம் தேதி விபத்து நடந்ததால், அன்றைய தேதியில் காப்பீடு ஊர்ஜிதத்தில் இல்லாததாலும், 2ம் எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்து சம்பந்தமாக 1, 3 மற்றும் 4 எதிர்மனுதார்கள்தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றாலும், 2 எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றாலும் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

**<u>4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து சமயத்தில் எனது தம்பி கவனமாகவும், சாலை விதிகளை கடைபிடித்தும்தான் ஓட்டிச் சென்றார் என்றால் சரிதான். அவருக்கு முன்னால் சென்று கொண்டிருந்த லாரியின் ஓட்டுநர் உரிய சமிஞ்சை இல்லாமல் சடன் பிரேக் போட்டு வாகனத்தை திடீரென்று நிறுத்தியதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு காரணம் முன்னால் சென்ற லாரியின் ஓட்டுநரின் கவனக்குறைவுதான் காரணம் என்றால் சரிதான். என் தம்பி ஓட்டிச் சென்ற வாகனத்திற்கு முன்னால் சென்ற லாரியின் டிரைவர் திடீரென்று வாகனத்தை நிறுத்துவார் என்று எனது தம்பி எதிர்பார்க்காததால்தான், எனது தம்பி ஓட்டிச் சென்ற வாகனம் முன்னால் சென்ற லாரியின் பின்னால் மோதியது என்றால் சரிதான். எனது தம்பி ஓட்டிச் சென்ற வாகனத்தின் முன்னால் சென்ற லாரியின் உரிமையாளரும், காப்பீட்டாளரும்தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்று சொன்னால் சரிதான். இந்த விபத்து சம்பந்தமான முதல் தகவல் அறிக்கை எனது சகோதரர் கார்த்திக்கின் மீதுதான் பதிவு செய்யப்பட்டது. இந்த விபத்து சம்பந்தமான குற்ற அறிக்கை எனது தம்பி இறந்து விட்டதால் அது தொடர் விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டு விட்டது என்றால் சரிதான். ஆவணங்களின்படி எனது தம்பிதான் குற்றம் இழைத்தவர் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தம்பி மீதுதான் குற்றம் இழைத்தவர் என்று கூறப்பட்டுள்ளதால் 4 ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு கழகம் எந்த இழப்பீடும் வழங்க கடமைப்பட்டதல்ல என்று சொன்னால் சரியல்ல. 4 ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு கழகம் எந்த இழப்பீடும் வழங்க கடமைப்பட்டதல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது தம்பி ஓட்டுநராகவும், விவசாயம் செய்தும் மாதம் ரூ.20 ஆயிரம் சம்பாதித்து வந்தார் என்று காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நானும், இறந்த எனது சகோதரரும், 2, 3 மனுதார்களும் ஒன்றாக இருந்து வந்தோம் என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயத்தில் நானும், மற்ற இரு மனுதாரர்களும் எனது தம்பியின் வருமானத்தை சார்ந்து இருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கோ, 2, 3 மனுதாரர்களுக்கோ எந்த வருமான இழப்பும் எனது தம்பியின் இறப்பால் ஏற்படவில்லை என்று சொன்னால்

சரியல்ல. பல்வேறு தலைப்புகளின்கீழ் நாங்கள் கேட்டிருக்கும் நஷ்டஈடு மிக அதிகம் என்ற சொன்னால் சரியல்ல. எனது சகோதரர்தான் குற்றம் இழைத்தவர் என்பதால் 4ம் எதிர்மனுதார் எந்த இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றாலும், 4ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று சொன்னாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u> –** இல்லை.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே ,
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால்,
கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு
படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை,
ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில்
கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
29.11.2024
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.